1981 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் பேசியதில் ** என்று சொன்னதை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

மதுரை மாவட்டம், மேலூர் அரசினர் கலைக் கல்லூரி மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். ஆண்டித்தேவர், என். எஸ். வி. சித்தன், செ. சிவசாமி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், என். வரதராஜன் ஆகியோர் ''மதுரை மாவட்டம், மேலூர் அரசினர் கலைக் கல்லூரியில் 26–3–1981 அன்று மாணவர்களிடையே ஏற்பட்ட கோஷ்டிச் சண்டையில் ஒரு மாணவர் கண்ணிழந்தும், சிலர் காயம்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டும் உள்ள நிலையிலும், கல்லூரி மூடப்பட்டுள்ள நிலையிலும், அங்குள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய ஏன் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாக கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26–3–1981 ஆம் நாளன்று மேலூர் அரசினர் கலைக் கல்லூரியில் இரு கோஷ்டி மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒரு மாணவர் பி. காம் வகுப்பில் கடைசி ஆண்டு படிப்பவர், அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவருடைய ஒரு கண் அன்றே நீக்கப்பட்டு, ஒரு கண் இழந்தவராக ஆக்கபட்டிருக்கிறார். 3 மாணவர்கள படுகாயத்தோடு மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல மாணவர்கள் மீது கிரிமினல் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. கல்லூரி மூடப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலைமைகள் தமிழகம் முழுவதும் பரவி இருக்கிறது. அது அரசுக்கும் தெரியும். கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்கள் மத்தியிலே இப்படிப் பூசல்கள் பல வாராக ஏற்படுவதும், அது சம்பந்தமாக அங்கே இருக்கக்கூடிய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

நிர்வாகிகளும், பொறுப்பில் இருப்பவர்களும், நீண்ட நெடுநாட்களாக அப்படிப்பட்ட பூசல்கள் மாணவர்களிடையே நிலவி வருகிற நிலையை அறிந்திருந்தும் அந்த நிலையைப் போக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்காததன் காரணமாகவே, மேலூரிலும் இந்தச் சம்பவம் 26-3-1981 ஆம் நாள் அன்று நடைபெற்றிருக்கிறது.

அந்தக் கல்லூரியிலே தேர்தல் காரணமாக, இரண்டு கோஷ்டி மாணவர்களிடையே மோதலும் நீண்ட நெடுநாட்களாக பகைமையும் இருந்திருக்கிறது. உள்ளூர் மாணவர்கள், வெளியூர் மாணவர்கள் என்று இரு கோஷ்டி ஏற்படும் நிலைமை உருவாகியிருக்கிறது. அந்த நிலைமையைப் போக்க அங்கே நிர்வாகத்தில் இருப்பவர்களும், ஆசிரியர்களும், தகுந்த நடவடிக்கையை உரிய நேரத்தில் எடுக்காததின் காரணமாகவே 26-3-1981 அன்று அந்தக் கல்லூரியில் இப்படிப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

26-3-1981 ஆம் நாளன்று ஒரு மாணவனுடைய தந்தை அவனைப் பார்க்க வந்த போது, சக மாணவர்களிடம் என மகன் எங்கே என்று கேட்டபோது, அவர்கள் வேண்டும் என்றே உங்கள் மகன் இல்லை என்று சொன்னதன் காரணத்தினால், அந்த மாணவன் திரும்ப வந்து, ஏன் அப்படி ஒரு பொய்யான தகவலைக் கொடுத்தீர்கள் என்று கேள்வி எழுப்பியதின் விளைவாக, உள்ளூர் மாணவர்கள், வெளியூர் மாணவர்கள் என்னும் இரு கோஷ்டி ஏற்பட்டு, கடுமையான மோதலும், அந்த மோதலில் கடுமையான ஆயுதங்களை பிரயோகிக்கிற அளவிற்கு நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது.

இந்த மோதலிலே கண்ணை இழந்த மாணவனுடைய தந்தையார் ஒரு சாதாரண கூலி. தனனுடைய ஒரே மகனை கஷ்டப்பட்டு தன் வாழ்நாள் முழுவதும் சம்பாதித்த பணத்தைக் கொண்டு படிக்க வைத்திருந்தார். அவனும் பி.காம் வகுப்பில் மூன்றாவது ஆண்டு படிக்கிறான். இந்த நிலைமையில் அவன் கண் இழந்திருப்பது பரிதாபத்திற்குரியது. அவனுக்கு தகுந்த நிவாரணம் அளிக்க அரசு முன் வரவேண்டும். அவனுக்கு வாழ்க்கை கிடைக்க உதவி செய்ய வேண்டும் என்பது மட்டும் அல்லாமல், இந்த ஆண்டு ஒரு பகுதி மாணவர்கள் ஏறத்தாழ 300 பேர்கள் பரீட்சை எழுத முடியவில்லை. கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. அதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்குள்ள பதட்டநிலையை போக்குவதற்கும் அந்த மாணவர்கள் மறுபடியும் கல்லூரிக்குச் சென்று பரீட்சை எழுதுவதற்கும் ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்க

வேண்டி, இங்கு விரிவாக விவாதிக்க வேண்டிய அவசியம் இருப்பதால், அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[காங்கிரஸ் (இ) உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் உள்ளே நுழைந்தார்.]

2. ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி

(ஆ) வெளிநடப்புச் செய்தவர்கள் அவைக்கு வருதல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்ப விரும்புகிறேன். எதிர்க்கட்சிகள் பொதுவாக வெளிநடப்புச் செய்வது ஜனநாயகத்தில் அளிக்கப்பட்டிருக்கிற உரிமை. ஆனால் போனவுடனேயே ஐந்து, ஐந்து நிமிடங்கள் முடிவதற்குள்ளாகவே திரும்ப வந்து விடுவார்களானால் ஒரு நாளைக்கு எவ்வளவு முறை வேண்டுமானாலும் எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. பொதுவாக ஒருமுறை வெளிநடப்புச் செய்கிறபோது அன்றைய சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்வதில்லை என்ற அடிப்படையில் தான், எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்வது வழக்கம். நான் தங்களைக் கேட்டுக் கொள்வது, ஒரு குறைந்தபட்ச காலநேரமாவது அதாவது அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் மினிமம் டைமாவது என்று வெளிநடப்பு செய்வது என்ற முறையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. என். எஸ். வி. சித்தன்** : தலைவர் அவர்களே, வெளிநடப்புச் செய்வது என்பது எதிர்க்கட்சிகளுக்கு ஜனநாயகத்தில் அளிக்கப்பட்டிருக்கிற உரிமை. (குறுக்கீடுகள்) நானும் அது போல் பேசவேண்டி வரும். அமைச்சர் அவர்கள் இந்த அவையின் மரபையும் கண்ணியத்தையும் காக்க வேண்டும். நாங்கள் ஒரு குறிப்பிட்ட பிரச்னைக்காக, அதை இங்கே எழுப்ப முடியவில்லை என்பதற்காக எங்கள் மனவருத்தத்தை வெளிப்படுத்த நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். மீண்டும் அவைக்குள்ளே வருகிறோம் என்றால் ஜனநாயகத்தில் நாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் இருக்கின்றன. மிக முக்கியமான பிரச்னையாக இருப்பதால் வந்திருக்கிறோமே தவிர கேலியும் கிண்டலுமாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசுவது என்பதை நீங்கள் எப்படி ஏற்றுக்கொள்கிறீர்கள். சபைக் குறிப்பில் அதை ஏற்றப்போகிறீர்களா என்று தெரியவில்லை. தயவுசெய்து நீங்கள் தீர்ப்பளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசாங்கத்தை எதிர்த்து வெளிநடப்புச் செய்திருக்கிறீர்கள். இப்போது அரசாங்கத்தை திர்த்து அல்ல, என்னை எதிர்த்து வெளிநடப்பு செய்திருக்கிறீர்கள். அகில இந்தியாவில் நீங்கள் எப்படி உதாரணமாக இருக்கப் போகிறீர்கள் என்று தெரியவில்லை. சபாநாயகரை எதிர்த்து பாராளுமன்றத்தில் கூட வெளிநடப்புச் செய்வதில்லை. எந்தக் கட்சியும் செய்யவில்லை. இங்கேதான் புதிய மரபுகளை கற்றுக் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) எனக்கு பாராளுமன்ற அனுபவம் நிறைய உண்டு. (குறுக்கீடு) அதுபற்றி அலுவல் ஆய்வுக் குழு முடிவெடுக்கும் அல்லது அவை முடிவு எடுக்கும்.

திரு. துரைமுருகன்: சபாநாயகர் அவர்களே, * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை அவைக்குறிப்பில் ஏற்றாதீர்கள்.

திரு. துரைமுருகன்: * * *

4. ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

*திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் மேலும் ஒரு கல்லூரியில் இன்றைக்கு விரும்பத்தகாத நிகழ்ச்சி நடந்திருப்பது பற்றி, நாம் மகிழக்கூடாத ஒரு பிரச்னை பற்றி மீண்டும் இந்த அவையில் பேசவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருப்பதுபற்றி உள்ளபடியே வருத்தப்படுகிறேன். மதுரை மாவட்டத்தில் மேலூரில், பொருளாதாரத் துறையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட அந்தப் பகுதியில் ஒரு கலைக் கல்லூரி தொடங்க வேண்டும் என்ற முயற்சியை இதற்கு முன் இருந்த அரசாங்கம் எடுத்து அங்குள்ள மக்களிடம் நன்கொடை பெற்றும் நிறைவு பெறாமல் 15 லட்சம் ரூபாயை அரசே கொடுத்து அங்கே கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் கல்லூரி கடந்த—ஒரு மாதகாலமாக மூடப்பட்டு அங்கே பயில்கிற மாணவர்கள் இந்த ஆண்டு தேர்வு எழுதுவார்களா, கல்லூரி எப்போது தொடங்கும் என்று அங்கு படிக்கும் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கிற நிலை இன்று ஏற்பட்டிருப்பது குறித்து இந்த மன்றத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் கவலைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

---

* மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

1981 ஏப்ரல் 22] [திரு. என். எஸ். வி. சித்தன்]

அங்கே இரண்டு குழுக்களாக மாணவர்கள் பிரிந்து மாணவர்கள் மத்தியில் ஒரு பதட்ட நிலை, மாணவர்களிடையே ஒரு போர் உணர்வு சில நாட்களுக்கு முன்னதாக ஏற்பட்டிருந்தும் கூட கல்லூரி நிர்வாகம் அல்லது காவல்துறை இதை முன்கூட்டியே கலந்து பேசி ஏன் தவிர்த்திருக்கவில்லை என்பது எனக்குப் புரியவில்லை. நம் கல்வி அமைச்சர் அவர்கள் அல்லது பொறுப்புள்ள அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட மாணவர்களை உடனடியாக அழைத்துப்பேசி ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கி மீண்டும் அந்தக் கல்லூரி திறக்கப்பட்டு மாணவர்கள் படிக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும். தியாகராயர் பொறியியல் கல்லூரியில் ஏற்பட்டது போன்ற விரும்பத் தகாத நிகழ்ச்சி அங்கு மீண்டும் ஏற்படக்கூடாது. இப்படிப் பட்ட நிகழ்ச்சிவேறு மாவட்டங்களில் உள்ள வேறு கல்லூரிகளில் பரவவிடக்கூடாது. இதுவே கடைசிநிகழ்ச்சியாக இருக்கவேண்டும் என்று அறிவுறுத்தும் வண்ணம் இந்தப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-20]

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்னையாக, மாணவர்கள் சம்பந்தப்பட்ட இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே, சம்பந்தப்பட்ட கல்வி அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இல்லாதது வருந்தத்தக்கது. இப்படி மாணவர்களிடத்திலே அடிக்கடி தமிழகம் முழுவதும் கோஷ்டிப் பூசல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. மதுரை மாவட்டம், மேலூரில் மட்டுமல்ல, பல இடங்களில் தொடர்ச்சியாக, ஆங்காங்கே மாணவர்களிடத்திலே பல குழப்புகள் ஏற்பட்டு, கோஷ்டி மோதல் நடந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலைமை காரணமாக, அங்கு ஒரு மாணவனுக்கு கண் போய்விட்டது. அது மட்டுமல்ல. பல சங்கடங்களுக்கும் சிக்கல்களுக்கும் உள்ளாக்கப்பட்டு, இது மேலும் மேலும் பரவிக் கொண்டிருக்கிறது. இதைப்போல், முன்பு திருப்பரங்குன்றத்தில் நடந்து, அதிலே இரண்டு மாணவர்கள் இறந்து விட்டார்கள். இதையெல்லாம் பார்க்கின்ற நேரத்திலே, அரசு இதிலே மெத்தனமாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். 23-3-1981-லே கொடுக்கப்பட்ட இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இதிலேயிருந்து, அரசு எவ்வளவு வேகமாக செயல்படுகின்றது என்பதைப் புரிந்துக் கொள்ள முடிகின்றது. அதன்காரணமாக பல சம்பவங்கள் நடைபெறுகின்றன. எனவே, இதைப்போல் இல்லாமல் ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்தால், உடனடியாக அவைகளை ஒரு வார காலத்திற்குள் எடுத்துக்கொண்டு, தீர்க்கப்பட்டால், பல பிரச்னைகளைத் தீர்க்க, சங்கடங்களைத் தீர்க்க முடியும். அந்த நோக்கத்திலே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை

உடனடியாக விவாதிக்க வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாக, இன்றையதினம் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் கலைக் கல்லூரியில் 26—3—1981ஆம் தேதி நடைபெற்ற இரண்டு மாணவர்கள் கோஷ்டிக்கிடையே நடைபெற்ற சண்டையில், பரிதாபகரமான சில சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஒரு மாணவனுடைய கண் பறி போய் இருக்கிறது. சில மாணவர்கள் மிகப்படுகாயமுற்று, மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். சுமார் 20 நாட்களுக்கு மேலாக அந்தக் கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக, இந்த வட்டாரத்திலே ஒரு பதட்ட நிலை இருக்கிறது. நான் அரசின், இந்த அவையின் கவனத்திற்கு கொண்டு வருவதெல்லாம், இந்த கோஷ்டிகள் உருவாவது என்பது ஒரு நாள் காலையில் உருவாகி, மாலையில் மலர்வது அல்ல. இது ஆழமாக சில மாதங்களாக உருவாகி, அந்த வட்டாரத்தில் சச்சரவுகள் உருவாகி, அந்தக் கல்லூரியில் அடி தடிகள் ஏற்பட்டு, கொலைக்கும் கொண்டு போகக்கூடிய ஒரு அவலநிலை உருவாகி வருகிறது. என்னைப் பொறுத்தவரையில் நான் பார்க்கிறேன்—கல்லூரியின் நிர்வாகம், கல்வி இலாகாவும் இதிலே இணைந்திருப்பதாக நான் பார்க்கிறேன். கல்லூரியில் கோஷ்டிகள் ஏற்படுவதற்கு நிர்வாகம் தான் முயற்சி செய்கிறது என்ற குற்றச்சாட்டை நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். ஆக, கோஷ்டிகள் உருவவது என்பது, அந்தக் கல்லூரி நிர்வாகத்திற்கு சாதகமாக, அவர்கள் ஊழல்களை மறைத்துக் கொள்வதற்காக, அது அமைகிறது. அந்த அடிப்படையில்தான் இந்த கோஷ்டிகள் ஒவ்வொரு கல்லூரியிலும் உருவாக்கப்படுகின்றன. கல்வி இலாகாவும், கல்லூரியின் நிர்வாகமும் முயற்சி செய்தால், இந்த கோஷ்டிப் பூசலைத் தடுக்க முடியும் என்ற உண்மையை நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இப்படி அந்த பாதிப்புக்குள்ளான மாணவனுக்கும், அதாவது கண் இழந்த மாணவனுக்கும், அவரது குடும்பத்திற்கும் பாதுகாப்பு கொடுக்கஉரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். உடனடியாக அரசு தலையிட்டு, அந்தக் கல்லூரியைத் திறக்க வேண்டும். அந்தக் கல்லூரியின் தேர்வு காலத்தை நீட்டித்து, இந்த ஆண்டுத் தேர்வுகள் எழுத அவர்களுக்கு வசதிகள் செய்து தர வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் விவாதிப்பதற்காக, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மேலூர் அரசினர் கலைக் கல்லூரி, இளங்கரை முதலாம் ஆண்டு மாணவன்

திரு. இராமசாமியைச் சார்ந்தவர்களுக்கும், கருணாகரன் என்பவரைச் சார்ந்தவர்களுக்கும் விரோதப் போக்கு இருந்து வந்துள்ளது. கடந்த 25-3-1981 அன்று, கருணாகரனும், அவரைச் சார்ந்தவர்களும் இராமசாமியைத் தாக்க முயற்சித்துள்ளனர். கல்லூரி முதல்வரும், சர்ச்சைகளுக்கு இடமளிக்காதீர்கள் என்று அம்மாணவர்களிடம் அறிவுரை கூறியுள்ளார் ஆயினும் அம் மாணவர்கள் அதனைச் செவிமடுக்காமல் 26-3-1981 அன்று கல்லூரி மாணவர்கள் அனைவரும் இரு பிரிவுகளாகப் பிரிந்து (ஒரு பிரிவு உசிலம்பட்டியைச் சார்ந்தவர்கள்; மற்றொரு பிரிவு மேலூரைச் சார்ந்தவர்கள். ஒருவரையொருவர், கத்தி கம்புகளைக் கொண்டு தாக்கியும் அவர்களுடைய உடைமைகளைச் சேதப்படுத்தியும், கலவரத்தில் ஈடுபட்டனர். இக் கலவரத்தில், மேலூர் பிரிவைச் சார்ந்த மாணவர்கள் திருவாளர்கள் மலைச்சாமி, தமிழ்ச்செல்வன், முத்துசாமி, கணபதி, கோபாலகிருஷ்ணன் மற்றும் உசிலம்பட்டிப் பிரிவைச் சார்ந்த ஜெயப்பிரகாஷ் எனும் மாணவரும் காயமுற்றனர். ஜெயப்பிரகாஷ் என்பவருக்குத் தலையில் ஏற்பட்ட காயத்தைத் தவிர, மற்ற அனைவருக்கும் சிறு காயங்களே ஏற்பட்டுள்ளது. தலையில் காயம்பட்ட மாணவர் திரு. ஜெயப்பிரகாஷ் சிகிச்சைக்காக மதுரை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அவருடைய இடது கண் பார்வை இழந்து விட்டதால், பழுதுபட்ட அந்த இடது கண் எடுக்கப்பட்டு விட்டது.

மலைச்சாமி என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் மேலூர் காவல் நிலைய குற்ற எண், 88/81ல் இ.த.ச 147,148 323, 427 ஆகிய பிரிவுகளின்கீழ், உசிலம்பட்டி பிரிவைச் சார்ந்த மாணவர்கள் திருவாளர்கள் தங்கமுத்து, பழனியாண்டி, ஒச்சத்தேவர், மூக்கராஜ், செல்வம் மற்றும் சந்திரசேகரன் ஆகியோர்களின் மீது ஒரு வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஜெயப்பிரகாஷ் கொடுத்த புகாரின் அடிப்படையில் மேலூர் காவல் நிலைய குற்ற எண். 89/81ல் இ.த.ச. 341, 323 மற்றும் 427 ஆகிய பிரிவுகளின் கீழ் மேலூர் பிரிவைச் சார்ந்த மாணவர்களான திருவாளர்கள் தமிழ்ச்செல்வம், இளங்கோ, கோபாலகிருஷ்ணன் மற்றும் மலைச்சாமி ஆகியோர்கள் மீது ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்குகளில் சம்பந்தப்பட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு, பின்னர் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். வழக்குகள் காவல் துறையின் புலனாய்வில் உள்ளது. மீண்டும் கல்லூரியில் மோதல் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, கல்லூரி முதல்வர் கல்லூரியையும், விடுதியையும் கால வரம்பின்றி மூடுமாறு உத்தரவிட்டுள்ளார். தேர்வுகளுக்காக 22.4.81 ஆம் நாளாகிய இன்று கல்லூரி திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது நிலைமை அமைதியாக உள்ளது. மாணவர்களிடையில் இப்படிப்பட்ட தகராறுகள் ஏற்படுவதும், அதன் காரணமாக வன்முறை செயல்கள் நிகழ்வதும், அதன் காரணமாக மாணவர்கள் உடைமை, உயிர் ஆகியவற்றிற்கு ஆபத்து ஏற்படுவதும் மிக மிக வருந்தத்தக்கது தான்.

இந்த அவையிலேயே பலதடவை பல்வேறு கல்லூரிகளை பற்றிய பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் கவலையோடு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இவையெல்லாம் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதனை உணர்ந்து மாணவர்கள் தங்களுடைய படிப்பின் நோக்கத்தை நிறைவேற்றுகிற வகையில் இப்படிப்பட்ட வன்முறை கலவரங்களுக்கு இடம் அளிக்காத வகையில் நடந்துகொள்வார்கள் என்று நாம் எதிர்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அரசோ அல்லது கல்லூரியோ சட்டங்கள் இயற்றினாலும், விதிமுறைகள் வைத்தாலும் அதை கடைபிடிக்க வேண்டியவர்கள்; கடைப்பிடித்தால் தான் அமைதி நிலவுமே தவிர கடைபிடிக்காவிட்டால் கலவரங்கள் மற்றவைகள் ஏற்படுகின்றன.

எல்லாவற்றிற்கும் அந்த அந்த கல்லூரி முதல்வர்கள் மாணவர்களிடையே சிறு சஞ்சலங்கள், சலசலப்புகள் ஏற்படும் பொழுது அதை தடுத்து நிறுத்துவதற்கு முழு முயற்சியையும் எடுக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்த முறையிலே தான் கல்லூரிகளிலே முதல்வர், பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியவர்கள் கொண்ட குழுக்களை அமைத்து இப்படிப்பட்ட கலவரங்கள் ஏற்படுமானால் முளையிலேயே கிள்ளி எரிகிற முயற்சிகளை செய்யவேண்டுமென்று கல்வித் துறையின் மூலமாக எற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. என்றாலும் கூட நம்மையும் மீறி இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நிகழ்கிறது வருந்துவதற்குரியது, எவ்வளவு சட்டதிட்டங்கள் நிறைவேற்றினாலும், விதிமுறைகள் வைத்தாலும் அவைகள் மீறப்படுகிற சூழ்நிலையிலே அமைந்து விடுகின்றன, அதற்கு எல்லோரும் ஒத்துழைப்பு தந்தால் தான் நல்லதொரு சூழ்நிலை ஏற்பட முடியும். இதைப் பொறுத்த வரையில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. முறைப்படி வழக்குகள் நடத்தப்பட்டு உள்ளபடியே குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள். அமைதியை நிலை நாட்டுவதற்கு முயற்சிகள் அந்த கல்லூரியைப் பொறுத்தவரை எடுக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படாத அளவிற்கு என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட முடியுமோ அதை எடுக்கும்படியாக கல்லூரி கல்வி இயக்குநர் மூலமாக கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இன்று கல்லூரியைத் திறந்து அவர்கள் தேர்வு எழுதுகிற வகையில் ஆயத்தப்படுத்துவதற்கு என்னென்ன முயற்சிகள் செய்ய வேண்டுமோ அதை எல்லாம் செய்யும்படியாக கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இன்று முதல் கல்லூரி திறக்கப்படுகிறது. அங்கே அமைதி நிலைமை நிலவுகிறதென்பதால் இதை மேற்கொண்டு விவாதிக்க அவசியம் இல்லையென்று சொல்லி இந்த விளக்கத்தை ஏற்றுகொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சரின் விளக்கத்திற்கு பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.